# ஊழியர் சேம நிதியம்
# நிதியியல் முக்கிய தகவல்கள் - 2018

பொதுமக்களின் தகவலுக்காக 2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஊழியர் சேம நிதியத்தின் முக்கிய நிதியியல் தகவல்களும் முதன்மைச் செயலாற்றக் குறிகாட்டிகளும் கீழே தரப்பட்டுள்ளன. தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சருக்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட 2018ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள், 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேம நிதிய சட்டத்தின் 6(4) ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க கௌரவ அமைச்சரினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளன. சொல்லப்பட்ட சட்டத்தின் 14(1)ஆம் நியதிகளுக்கமைய 2018ஆம் ஆண்டிற்கான வட்டி வீதமானது கௌரவ நிதி அமைச்சரினதும் கௌரவ தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரினதும் சம்மதத்துடன் நாணயச் சபையினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

**தொகுக்கப்பட்ட வருமானக் கூற்று**
**2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

(ரூ. மில்லியன்)

| விடயம் | 2018 | 2017 | மாற்றம் (%) |
|---|---|---|---|
| **முழு மொத்த வருமானம்** | **222,843** | **223,192** | (0.16) |
| **கழி: மொத்தத் தொழிற்பாட்டுச் செலவுகள்** | **1,505** | **1,348** | 11.65 |
| ஊ.சே.நி. திணைக்களம்: இலங்கை மத்திய வங்கி | 902 | 793 | 13.75 |
| ஊ.சே.நி. பிரிவு: தொழில் திணைக்களம் | 603 | 555 | 8.65 |
| **வருமான வரிக்கு முன்னரான தேறிய வருமானம்** | **221,338** | **221,844** | (0.23) |
| கழி: வருமான வரி | 30,720 | 18,897 | 62.57 |
| **வருமான வரிக்குப் பின்னரான தேறிய வருமானம்** | **190,617** | **202,947** | (6.08) |
| கூட்டுக: முன்கொண்டு செல்லப்பட்ட பிடித்துவைக்கப்பட்ட இலாபம் | 268 | 189 | 41.80 |
| ஆரம்ப நிலுவைச் சீராக்கங்கள் (குறிப்பு 01 பார்க்க) | 2,203 | - | - |
| சீராக்கப்பட்ட ஆரம்ப பிடித்துவைக்கப்பட்ட இலாபம் | **2,471** | **189** | - |
| **உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள தேறிய வருமானம்** | **193,088** | **203,136** | (4.95) |
| கழி: நடைமுறை ஆண்டு மீளளித்தல்கள் மீது செலுத்தப்பட்ட வட்டி | 4,296 | 4,624 | (7.09) |
| கூட்டுக/(கழி): இலாபச் சமநிலைப்படுத்தல் ஒதுக்கத்திலிருந்தான/ ஒதுக்கத்திற்கான மாற்றல் | 6,000 | (7,000) | - |
| கழி:2018இல் 9.50% இல் உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி (2017இல் 10.50%) | 194,633 | 191,244 | 1.77 |
| **முன்கொண்டு செல்லப்பட்ட பிடித்துவைக்கப்பட்ட இலாபம்** | **159** | **268** | **(40.67)** |

**தொகுக்கப்பட்ட நிதியியல் நிலைமைக் கூற்று**
**2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு**

(ரூ. மில்லியன்)

| விடயம் | 2018 | 2017 | மாற்றம் (%) |
|---|---|---|---|
| சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் (அருவச் சொத்துக்கள் உட்பட) | 290 | 300 | (3.33) |
| நிதியியல் சொத்துக்கள் | 2,298,831 | 1,992,372 | 15.38 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 17,844 | 75,863 | (76.48) |
| **மொத்தச் சொத்துக்கள்** | **2,316,965** | **2,068,535** | **12.01** |
| கழி: நடைமுறைப் பொறுப்புக்கள்* | 27,604 | 2,236 | 1,134.57 |
| **மொத்தத் தேறிய சொத்துக்கள்** | **2,289,361** | **2,066,299** | 10.80 |
| **பின்வருவனவற்றின் மூலம் காட்டப்படுகிறது:** | | | |
| மொத்த உறுப்பினர் நிலுவை (வட்டி வரவு வைக்கப்பட்ட பின்னர்) | 2,254,194 | 2,020,782 | 11.55 |
| ஒதுக்கங்கள் | 35,007 | 45,249 | (22.63) |
| பிடித்துவைக்கப்பட்ட இலாபம் | 159 | 268 | (40.67) |
| **நிதியத்தின் தேறிய பெறுமானம்** | **2,289,361** | **2,066,299** | **10.80** |

* 2018இன் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூ.24,182 மில்லியன் கொண்ட வருமான வரி செலுத்தத்தக்க தொகையை உள்ளடக்குகின்றது.

**பங்குரிமை மாற்றங்கள் பற்றிய கூற்று**
**2018 திசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டிற்கானது**

(ரூ. மில்லியன்)

| விபரம் | உறுப்பினர் நிலுவை | பிடித்து வைக்கப்பட்ட இலாபம் | ஏனைய ஒதுக்குகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| **2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை** | **1,810,594** | **189** | **30,713** | **1,841,497** |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதியில் தேறிய மாற்றம் | - | - | 7,536 | 7,536 |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் - 2017 | - | 202,947 | - | 202,947 |
| 2017இன் தேறிய பங்களிப்புக்கள் | 18,944 | - | - | 18,944 |
| மீளளிப்புக்கள் மீது செலுத்தப்பட்ட உறுப்பினர் வட்டி - 2017 | - | (4,624) | - | (4,624) |
| செலுத்தத்தக்க உறுப்பினர் வட்டி (2017இல் 10.50%) | 191,244 | (191,244) | - | - |
| இலாப சமநிலைப்படுத்தல் ஒதுக்கிற்கான மாற்றல்கள் | - | (7,000) | 7,000 | - |
| **2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை** | **2,020,782** | **268** | **45,249** | **2,066,299** |
| இ.நி.அ.நி. 09 இனைப் பின்பற்றுவதன் தாக்கம் | - | 2,207 | (4,242) | (2,035) |
| ஆரம்ப நிலுவைத் திருத்தங்கள் - தொழில் திணைக்களம் | - | (4) | - | (4) |
| திருத்தப்பட்ட ஆரம்ப நிலுவை | **2,020,782** | **2,471** | **41,007** | **2,064,260** |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் - 2018 | - | 190,617 | - | 190,617 |
| 2018இன் தேறிய பங்களிப்புக்கள் | 38,779 | - | - | 38,779 |
| மீளளிப்புக்கள் மீதான செலுத்தப்பட்ட உறுப்பினர் வட்டி - 2018 | - | (4,296) | - | (4,296) |
| செலுத்தத்தக்க உறுப்பினர் வட்டி (2018இல் 9.50%) | 194,633 | (194,633) | - | - |
| இலாப சமநிலைப்படுத்தல் ஒதுக்கிலிருந்தான மாற்றல்கள் | - | 6,000 | (6,000) | - |
| **2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை** | **2,254,194** | **159** | **35,007** | **2,289,361** |

**தெரிவு செய்யப்பட்ட முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகள்**

| குறிகாட்டிகள் | 2018 | 2017 |
|---|---|---|
| **உறுப்புரிமை** | | |
| பங்களிக்கும் உறுப்பினர் கணக்குகள் (பங்களிப்புச் செலுத்தும் உறுப்பினர்கள்) (மில்.) | 2.6 | 2.8 |
| பங்களிக்காத உறுப்பினர் கணக்குகள் (பங்களிப்புச் செலுத்தாத உறுப்பினர்கள்) (மில்.) | 16.0 | 15.2 |
| **மொத்த உறுப்பினர் கணக்குகள் (மில்.)** | **18.6** | **18.0** |
| பங்களிக்கும் தொழில்தருநர்கள் (எண்ணிக்கை) | 86,203 | 76,782 |
| **மொத்த உறுப்பினர் நிலுவைகள் (ரூ. மில்.)** | **2,254,194** | **2,020,782** |
| **கிடைக்கப்பெற்ற உறுப்பினர் பங்களிப்புக்கள் (ரூ. மில்.)** | **144,996** | **133,353** |
| உறுப்பினர் பங்களிப்புக்களில் ஆண்டு வளர்ச்சி (%) | 8.7 | 12.7 |
| **மொத்த வருமானம் (ரூ. மில்.)** | **222,843** | **223,192** |
| அரச பிணையங்களிலிருந்தான வருமானம் | 218,259 | 213,203 |
| பங்கு மூலதனத்திலிருந்தான வருமானம் | | |
| பங்கிலாப வருமானம் மற்றும் மூலதன இலாபங்கள் | 3,767 | 2,994 |
| பங்கு மூலதனங்களின் சீர்மதிப்பு விலைமதிப்பீடு மீதான இலாபம்/(இழப்பு) | (10,901) | (163) |
| கம்பனிப் படுகடன்கள் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவிலிருந்தான வருமானம் | 5,956 | 4,478 |
| நிலையான வைப்புக்களிலிருந்தான வருமானம் | 5,359 | 3,594 |
| நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழப்பு | 1 | (1,502) |
| ஏனைய வருமானம் | 403 | 589 |
| **தொழிற்பாட்டுச் செலவினம் (ரூ. மில்.)** | **1,505** | **1,348** |
| நிதியத்தின் முழுமொத்த வருமானத்தின் %ஆக | 0.68 | 0.60 |
| **முதலீட்டுச் சொத்துப்பட்டியல் (ரூ. மில்.)** | **2,298,831** | **1,992,372** |
| முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் ஆண்டு வளர்ச்சி (%) | 15.4 | 12.4 |
| **உள்ளமைப்பு (%)** | | |
| அரச பிணையங்கள் - திறைசேரி முறிகளும் உண்டியல்களும் | 92.2 | 91.3 |
| பங்குரிமை மூலதனம் | 3.3 | 4.2 |
| கம்பனி படுகடன் சாதனங்கள் | 1.9 | 2.1 |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | 1.1 | - |
| நிலையான வைப்புக்கள் | 1.5 | 2.4 |
| **மொத்தம்** | **100** | **100** |
| **மீளளிப்புக்கள்** | | |
| உறுப்பினருக்கு செலுத்தப்பட்ட தொகை (ரூ. மில்.) | 106,497 | 117,477 |
| மீளளிப்புக்கள் - பகுதிக் கொடுப்பனவுகள் மற்றும் 30% மீளெடுப்புக்கள் உள்ளடங்கலாக (எண்.) | 241,190 | 260,989 |
| மீளளிப்புக்களின் வருடாந்த அதிகரிப்பு (%) | (9.3) | 8.4 |
| **வீடமைப்புக் கடன் உத்தரவாத வசதிகள்** | | |
| ஒப்புதலளிக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 4,974 | 4,946 |
| வழங்கப்பட்ட உத்தரவாதச் சான்றிதழ்களின் (எண்ணிக்கை) | 10,036 | 10,998 |
| **முதலீட்டு வருமானம்** | | |
| சராசரி சொத்துப்பட்டியல் மீதான வருமானத்தின் மொத்த வீதம் (%) | 10.39 | 11.83 |
| உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி வீதம் (%) | 9.50 | 10.50 |
| உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட பயனுறு வட்டி வீதம் (%) | 9.54 | 10.51 |

**தொகுக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள்**
**2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை**

(ரூ. மில்லியன்)

| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை | 2018 | 2017 |
|---|---|---|
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு | 196,280 | 162,651 |
| முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | (234,571) | (179,568) |
| நிதியியல் நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு | 38,513 | 15,864 |
| **காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | **222** | **(1,053)** |
| ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் | 3,274 | 4,385 |
| **ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் - சீராக்கங்களுக்கு முன்னயவை** | **3,496** | **3,332** |
| சீராக்கங்கள்: | | |
| ஆண்டின் இறுதியில் காசு நிலுவை - தொழில் திணைக்களம் | (77) | (58) |
| **ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்** | **3,419** | **3,274** |

**உறுப்பினர் நிலுவைகள் எதிர் சந்தை வீதங்களுக்கான வருவாயின் பயனுறு வீதம் %**

| ஆண்டு | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| ஊ.சே. நிதியத்தினால் வழங்கப்பட்ட கூட்டுக்களின் பயனுறு வீதம் | 10.60 | 10.57 | 10.51 | 10.51 | 9.54 |
| இதையொத்த ஓய்வூதிய நிதியத்தினால் வழங்கப்பட்ட வருவாய் வீதம் | 10.00 | 9.30 | 9.10 | 9.00 | 9.00 |
| பிரதான சேமிப்பு வங்கியின் ஓராண்டு நிலையான வைப்பு வீதம் | 6.50 | 7.25 | 11.00 | 11.00 | 10.50 |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 6.20 | 6.20 | 8.17 | 9.07 | 8.81 |
| ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் - கொ.நு.வி.சு (2013=100) | 3.3* | 3.8 | 4.0 | 7.7 | 2.1 |

* ஆண்டுச் சராசரி பணவீக்கம் (2006/07 = 100) மூலம்: ஆண்டறிக்கை 2018, இலங்கை மத்திய வங்கி

**விளக்கக் குறிப்புக்கள்**

1. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 39 - நிதியியல் சாதனங்கள்: இனங்காணலும் அளவீடுதலும் இனை இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 09 - நிதியியல் சாதனங்கள்: மாற்றீடு செய்துள்ளதுடன் 2018.01.01 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கின்ற வருடாந்த அறிக்கையிடும் காலப்பகுதிக்கு ஏற்புடையதாகும். இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 09இல் வழங்கப்பட்ட திருத்தப்பட்ட அணுகுமுறைக்கமைய, நிதியமானது இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 09 இனைப் பின்பற்றுவதிலிருந்து தோன்றுகின்ற வேறுபாடுகளை 2018.01.01 அன்று உள்ளவாறான பிடித்துவைக்கப்பட்ட உழைப்புகளுக்காக நேரடியாகச் சீர்செய்துள்ளதுடன் 2017 இற்கான ஒப்பீட்டுத் தகவல்களை மீளக்குறிப்பிடவில்லை. எனவே, 2017 இற்கான ஒப்பீட்டுத் தகவல்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமம் 39 இன்கீழ் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் 2018 இற்காக எடுத்துரைக்கப்பட்ட தகவல்களுடன் ஒப்பிடத்தக்கவையல்ல. மேலும்,
   (i) புதிய நிதியியல் சொத்துக்கள், இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 09இல் தரப்பட்ட புதிய வகைப்படுத்தலுக்கிணங்கியிருப்பதற்கு மீள்வகைப்படுத்தப்பட்டதுடன் நிதியியல் சொத்துக்களின் அளவீடானது அதற்கமைய மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக, பட்டியலிடப்பட்ட அனைத்து பங்குரிமை மூலதனங்களும் (வர்த்தகப்படுத்தல் மற்றும் முதலீடு) இலாபம் மற்றும் நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியாக மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அனைத்து சந்தை விலை குறிக்கப்பட்ட இழப்புகளும் பங்குரிமை மூலதனத்தின் சீர்மதிப்புப் பெறுமதியின் இழப்பாக வருமானக் கூற்றுக்கு நேரடியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் சீர்மதிப்புப் பெறுமதியினை நம்பகரமாக மதிப்பிடுவதற்கு போதிய தகவல்கள் கிடைக்கப்பெறாமையின் காரணமாக தொடர்ந்தும் செலவில் அளவிடப்பட்டன.
   (ii) பெறுமதியிழப்பு ஒதுக்கீட்டினைக் கணிக்கும் முறையானது உறப்பட்ட இழப்பு மாதிரியிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட இழப்பு மாதிரிக்கு மாற்றம் செய்யப்பட்டது.
2. 2018.04.01 அன்று தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் 2017இன் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம் சட்டமாக்கப்பட்டதுடன் நிதியத்தின் வரிப் பொறுப்பு பின்வருமாறு குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.
   (i) ஊழியர் சேம நிதியத்திற்கு ஏற்புடைய வருமான வரி வீதமானது 10 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக அதிகரிக்கப்பட்டதுடன் வரிவிதிக்கத்தக்க வருமானக் கணிப்பீட்டின் அடிப்படையானது மாற்றம் செய்யப்பட்டது. இதனூடாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டுக்கான வரிச் செலவினம் ரூ.12 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றை தோற்றுவித்தது. (ரூ.18 பில்லியனிலிருந்து ரூ.30 பில்லியன் வரை).
   (ii) 2018.03.31 வரை மொத்த வருமானத்தின் பகுதியொன்றாக திறைசேரி முறி வட்டி வருமானம் மீது செலுத்தப்பட்ட 10 சதவீதம் கொண்ட பிடித்துவைத்தல் வரியினையும் தொடர்புடைய அதன் மீதான வரிச் செலவினத்தையும் நிதியம் இனங்கண்டது. எவ்வாறாயினும், மேற்குறித்த சட்டத்துடன் அரசாங்கப் பிணையங்கள் மீதான பிடித்துவைத்தல் வரி இல்லாதொழிக்கப்பட்டதன் காரணமாக பிடித்துவைக்கப்பட்ட வரி மதிப்புக் குறைத்தலானது 2018.04.01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் வருமான வரியின் பாகமொன்றாகக் கருத்திற்கொள்ளப்படவில்லை. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அரசாங்கப் பிணையங்கள் மீதான வருமானம் குறைவடைவதற்கு வழிவகுத்தது.

மேற்கூறப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் முக்கிய தகவல்கள் ஏற்புடைய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (LKAS/SLFRS) இணங்க தயாரிக்கப்பட்ட 2018ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை என்பதனை கீழே கையொப்பமிட்டவர்களாகிய நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

**இந்திரஜித் குமாரசுவாமி**
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

**ஏ ஜி யு திலகரத்ன**
கண்காணிப்பாளர்
ஊழியர் சேம நிதியத் திணைக்களம்

ஊழியர் சேம நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
ஊ.சே.நிதிய உதவிப்பீடம் : 2206636, 2206642, 2206672, 2206690, 2206691, 2206692, 2206693
தொலைநகல் : 2477958 வெப்தளம் : www.epf.lk மின்னஞ்சல் : epfhelpdesk@cbsl.lk